பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நபியவதார வம்மானை.

இதைப் பாடியவர்

சீறுவென்னு மதுரகவிப் புராணஞ் செய்த

உமறுப் புலவரவர்கள் குமாரராகிய

கவிக்களஞ்சியப் புலவரவர்கள்.

இது

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M.A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால் பார்வை யிடப்பட்டு,

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1951. ரூ. 0-3-6.

O-, 87LKK,N
N51
113905

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

நபியவதார

வம்மானை.

இதைப் பாடியவர்

சீறவென்னு மதுரகவிப் புராணஞ் செய்த

உமறுப் புலவரவர்கள் குமாரராகிய

கவிக்களஞ்சியப் புலவரவர்கள்.

இது

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M.A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால் பார்வை யிடப்பட்டு,

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1951. [ரு 0-3-6.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

நபியவதாரவம்மானை.

காப்பு

வெண்பா.

திங்கடனை யழைத்த செல்வ முஹம்மதின் மேல்
மங்களமா யம்மானை வாழ்த்தவே-சங்கையுட
னாதியே நீதி யநாதியே அல்லாவே
சோதியே நீயே துணை.

கண்ணிகள்.

ஆதியை யெப்போது மன்பாய்ப் புகழ்வேனே
சோதி யிறசூலுடைய துய்யபதம் யான் பணிவேன் (1)

துய்ய அபூபக்கர் துணையா முமறுகத்தாப்
செய்யு முதுமா னலியார் சீர்பாதம் போற்றி செய்வேன் (2)

ஆன வஸனுஸைனை யன்பாய் புகழ்வேனே
தேனார் முஹியித்தீன்றூட் செப்பமுட னான்மறவேன் (3)

நான் மறவேன் மீரா நல்லோர் பதமிரண்டுந்
தான் மறவே னெக்காளுஞ் சங்கையுட ஆதரவாய் (4)

ஆதியருளாலே யஹ்மதின்மே லம்மானை
யேது மறியேன் சிறியே னியம்பத் தொடங்குகிறேன் (5)

நுவலும் கிசுறத்தாயிரத்தி னூற்றிருபத்தைந் ததனின்
மவுலும் விஜய வருஷமதில் வாழ்த்துகிறேன் (6)

கொண்டாடுந் தீனோர் குலங்கள் செழித்திருக்கும்
வண்டாடுஞ் சோலை வகுதைநக ராதிபதி (7)

சேகு முதலி தரும் செல்வருமர்ப் புலவர்
வாரு பெறப் பெற்று வளர்த்தெடுக்க வந்தமுகில் (8)

எழுத்து முதற்பஞ்ச விலக்கணத்தை யுட்பதித்து
வழுத்தும் சீருவுரையை வாகாய்க் கவிதை செய்வோர் (9)
காரணப் பேரான கவிக்களஞ்சி நக்கபிமேற்
பூரணத்தா லம்மானை போற்றிப் புகழ்வேனே (10)
ஆதம் பயஹாம்ப ரவர்வழியி லைம்பதின்மே
னீதியப் துல்லாவுடைய நெற்றிதனின் முத்தொளிவாய் (11)
முத்தொளிவாய் நின்ற முதலோன் றிருவொளிவைத்
தத்தும் பரியுடைய சாமரசன் றன் மகளார் (12)
றன்வயிற்றிலே தரிக்கத் தாங்காப் பெரும் பொருளைப்
பொன் போற் றரிக்க வென்று புறப்பட்டார் மக்கநகர் (13)
மக்க நகர் வரவே வந்தோர் பொருட்டதனு
லக்கணமே முத்தொளிவை யாமினார் தான்றரித்தார் (14)
வந்து தரிக்க வல்லோன் வானவரைத் தான் கூவி
வெந்தெரியும் பாழ் நரக மீருமலே யவித்து (15)
இன்பந்தருஞ் சுவர்க்க மெட்டும் வகை வகையா
யன்பு பெற நீங்க ளலங்கரியு மென்றுரைத்தான் (16)
அறுசுங் குறுசு மழகான சொர்க்க மெட்டும்
பிரியமுடன் தானோர்கள் பிந்தா தலங்கரித்தார் (17)
வேட்கையிபு லீசறிந்து மேன்மை தலைகுலைந்து
வாழ்க்கை யறிந்தென்று மக்களொடுந் தானழுதான் (18)
மாத முதலில் வலுமை யுடையரென்றே
ஆதநபி சொல்லியவ ரன்பா யகன்றனரே (19)
மருவும் பிறைபிரண்டா மாதமிதி ரீசுநபி
பெருமை யுடைய நல்ல பிள்ளையென்று தானுரைத்தார் (20)
ஊன்றுக் கருவயிற்றி லுண்மை தரும் பாலரென்று
மூன்றும் பிறைமாத மொழிந்தாரே நூஹுநபி (21)
நாலாம் பிறைமாத நல்ல கொலுவுடைய
பாலருமைந்தரென்று பகர்ந்தா ரிபுறுஹீம் நபி (22)
அஞ்சாம் பிறைமாத மான இசுமாயீல் நபி
மிஞ்சிங்குண மானவ நள் வேதாம்ப ரென்றுரைத்தார் (23)
ஆறும் மறைமாத மழகான மூசாநபி
பேறும் பெறும் பதவிப் பிள்ளையென்று தானுரைத்தார் (24)

இத்தப்படி யிருக்க வேக்தலபு துல்லாதான்
மனா தொழிற்செய்ய மதீனநகர் போயிருந்தார் (25)
மதினநகர் நீங்கி வரும்வழி யிலபுடை
லதிகவெதுப்பா யபுதுல்லா தானிறந்தார் (26)
அப்துல்லா தானிறக்க வாமினார் கேட்டறிந்து
கவலையாய் வாடிக் கலங்கிமனந் தேறினரே (27)
ஏழாம் பிறைமாத மிலங்கு தாவூதுநபி
தாழாத மன்றாட்டந் தாங்குமக னென்றுரைத்தார் (28)
எண்ணி எட்டாமாத மெழிலார் சுலைமாநபி
யண்ணலது னான்கிழைக்கோ ராணிமுத்தாமென் றுரைத்தார்
ஓதுமொன்பதாமாத முண்மையுள்ள ஈசாநபி
வேதம் புறுக்கானுடைய வேதாம்ப ரென்றுரைத்தார் (30)
இறைவ னருளான நபிமா ரித்தபடி வெற்றிசொல்லிப்
பிரவை முஹம்மதென்று பேரு முரைத்தாரே (31)
இன்பதுன்ப மில்லா தேகபெரியோ னருளா
லன்புபெற சித்திரையி லாமினார் தம்முடனே (32)
மாதமொரு நபிமார் வந்து மனுமியத்தி
லோதி மறைந்தாரே பொன்பதா மாதமட்டும் (33)
இந்து நுதலியர்பா லிப்படியே நாடோறும்
வந்து மலக்குகளு மாராயங் கூறினரே (34)
உள்ளங் குளிர்ந்தங் குவந்திருக்கு நாளையிலே
வள்ளல் பொருட்டால் வயிற்றுவலி கண்டதுவே (35)
கருதும் வயிற்றுவலி காண வடிக்கடியே
யொருதிதனை யழைத்தவ் வூரவர்க்குச் சொல்லுமென்றார்
சொன்னமொழி நல்லதென்று தோகை மின்னாளாவரை
கன்னி கருமாரிக்குத்தான் கைகொடுக்க வாருமென்றாள் (37)
வாருமென்ற போது மக்க மங்கையர்க ளெல்லோருஞ்
சேர வொரு முகமாய்த் திங்குமொழி செப்பலுற்றார் (38)
முன்னாளி னங்கண் மொய்குழலா ளெல்லோரும்
பொன்னாரு மார்பர் புகழபுதுல்லாவுடைய (39)
நெற்றி யொளிவைக்கண்டு நெடுமூச் செறிவோரும்
முற்றதிரு முகத்தையூன்று நின்று பார்ப்போரும் (40)

பேரழகைக் கண்டு பெருமூச் செறிவோரும்
தோளழகைக்கண்டு து . த்துப் பதைப்போரும் (41)

நீல விழியழகை நேரிட்டு [illegible] ப்போரும
[illegible] மயலாகி மயங்கிக் கிடப்போரும் (42)

நற்காரண வார்த்தை நாம்கேட்போ மென்போரும்
பற்பல ஜனங்களெல்லாம் பரிவுடனே நிற்போரும் (43)

ஆளமணமான வபுதுல்லாதம் முடனே
வாழ மனை வியராய் வாழ்ந்திருக்க வேணுமென்று (44)

கண்ணூரப் பேரழகைக் கண்டுமயல் பெரிதா
யண்ணூர்ந்து நோக்கி யாவரும் பலகாலும் (45)

இப்படியே நாங்க ளிருக்கவெங்கள் சொன்மறுத்துத்
தப்பாக வேயாமினுர் தம்மையேதான் மணந்தார் (46)

மணந்தாரெனும்வார்த்தை மங்கையர்கள் கேட்டறிந்து
குணத்தா னெவ்வாத துயர்க்கொடுஞ்சொற் பொருமையினல்

அந்த நாடன்னில வர்மேன் மயலாகிச்
சிந்தைநொந்து நானூறு தேன்மொழியார் தாமிறந்தார் (48)

நானூறு மங்கையர்க ளுடி இறந்ததல்லாற்
ருமினுர் வயிற்றிற் செப்புமிந்தப் பிள்ளைவர (49)

வைத்து வணங்கிவரன் முறையாய் நாங்கடொழும்
புத்துகா னெல்லாம புரண்டு விழுந்ததுவே (50)

ஆதார மில்லாம லாரும் பிறைமாத
மாதா வயிற்றிருக்க மாண்டார ரவர்தகப்பன் (51)

பேசுமிந்தக் கோட்டியுள்ள பிள்ளைக்கு மாரிருக்குத்தா
னுசைபெற நாங்க ளொருவரெவர் வந்தாலும் (52)

குடிக்கு வழுவாங்குங் கொற்றவர்க்கு மேருது
கடுக்கழறு மெங்கள்குல நாங்கள் வரக் காரியமேன் (53)

அங்கவர்களெல்லா மாமினுர் தம்மனையின்
மங்கைமுன்னே நாங்கள் வருவதில்லை யென்றுரைத்தார் (54)

வருவதில்லை யென்றுபல மங்கையர்க டானுரைக்கப்
பருவங் குலைந்து பதறிவந்தாள் தாதியுமே (55)

வந்தாமினுர் மனையில் வளரபுதுல் முத்தலிபு
சிந்தை கலங்குமந்த தீங்குரையைக் கேட்டளவில் (56)

ஏங்கியே முத்திலிபங் கெனசெய்வோ மென்னவென்று
தீங்கற்றுங் கஃபாவைத் தேடி நடந்தனரே (57)

வல்ல புகழ்க்கருபாவை வலஞ்செய்து வாயினின்று
கல்லை வணங்கியிரு கையேந்தி நின்றனரே (58)
வாயு முறுமுறுத்து மாறுமலே புகழ்ந்து
காயந் தளர்ந்து மனங்கரைந்து ருகு மந்நேரம் (59)
நீதியறி வாளினைவர நிச்சயமா யெப்போது
மாதியந்த மில்லாத வல்லா வருளாலே (60)
மலக்குகளையு நல்ல வானசொர்க்கப் பெண்களையும்
பலர்க்கு மறியாவொண்ணுப் பக்கிசா ரங்களையும் (61)
நன்றாக பூமிதனி லொட்டமுடனே யிறங்கிச்
சென்றாமி னாருடையசெல்வமனை யுட்புகுந்து (62)
வையம் புகழவரும் வாகாமி னார்தமக்குக்
கைகருமஞ் செய்து கடன்கழித்து வாருமென்றான் (63)
இறைபுரைக்க விண்ணோ ரெழுந்து நிறையாய்
பேறான சொர்க்கப் பெருமை யுள்ளவாறு வரிற் (64)
ஹூறுனிப் பெண்கள் குளித்துத் தலையுலர்த்தி
மறைமொழி யாமினா நன்மனையைச் சூழ்ந்திருந்தார் (65)
பட்டுடுத்தி நல்ல பலபணியுந் தான் பூண்டு
கட்டழகு மேனியில் கஸ்தூரி தான் பூசி (66)
கூடாத கூந்தலது கோரி யொளிபிறக்க
வாடாத மாலை வகைவகையாய்த் தான்சூடி (67)
பேறுடைய ஹூறுனிப் பெண்க ளனைவோரும்
வீறுடைய பூமிதனில் விண்ணிருந் திறங்கிவந்தார் (68)
வந்தாமி னாருடைய வல்லமனை யுட்புகுந்து
பந்தி பந்தி யாகப் பரந்தங் கிருந்தனரே (69)
மாணிக்கத் தான்முத்தா வச்சிரத்தார் பச்சையினா
லாணிப்பொன்னான் மின்னொளிவா லன்பான பட்சியெல்லாம்
தாமித மில்லாமற் றானே பறந்தெழுந்தே
யாமினார் தன்மனையை யன்பாகச் சூழ்ந்ததுவே (71)
பந்திதனிற் சூழ்ந்த பறவைதனி லோர்பறவை
முத்தொளி போலே யாமினார் முன்பாக வந்ததுவே (72)
அங்கு பறவைவர வாமினார் தாம்பயந்து
பங்கமுறச் சிந்தை பதறி பதங்கினரே (73)

தரித்த பயவேர்வை தானீங்க வேண்டுமென்று
விரித்த சிறகதனால் மேலாக வீசினதே (74)

ஒங்குஞ் சிரகால்வீச வுடலெல்லாந் தான்குளிர்ந்து
வாக்காப் பயமும் வருத்தமு நீங்கியதே (75)

இந்தபடியிருக்க வின்பசொர்க்கப் பானகத்தை
மன்னுவிண்ணைத் தேந்தி மலக்கொருவர் வந்து நின்றார் (76)

கொண்டுவந்து நிற்கவொரு ஹூறுனிப் பெண் வாங்கிக்
கண்டனைய சொல்லார் தங்கையிற் கொடுத்தினரே (77)

தாங்கும்பிறை யாமினார் தம்வயிறு தாங்குளிர
வாங்கிக் குடிக்க வயிற்றுவலி நீங்கியதே (78)

நீங்கியபின் ஆசியா நீதித் தருமறியம்
ஆங்கு ஹூறுனியரையல்லா லனுப்பினனே (79)

அரிய வலப்புறத்தை யாசியா கை தாங்க
மரிய மிடப்புறத்தை வந்திருகை தாங்கினரே (80)

ஹூறுனிமார்கள் குறைகாணக்கா றன்னையுமே
மாறுமற் கால்பிடித்து வாழ்த்தியங்கு நின்றனரே (81)

அக்கோஞ் சொர்க்கத் தரிய மலக்கொருவர்
வன்ன நிறம் பட்டேந்தி வயல்வந்து நின்றனரே (82)

பேரான சொர்க்கப்பெண்கொடியார் தாம்வாங்கிக்
கூறாமினார் தமக்குக் கொய்துடித்து வைத்தனரே (83)

தெளிவான மலக்கொருவர் செய்ய ஹூறுனிகையி
லொளிவான பானகத்தை யுவந்து கொடுத்தனரே (84)

வாங்கியே யபுதுல்லாதம் மனைவியங்க னேயருந்த
வோங்குமுடலெல்லா மோரொளிவா யானதுவே (85)

பேரொளிவு மேனியெல்லாம் பெருத்துப் பளபளென
வோரொளிவாய் வானமட்டு மொன்றும் இலங்கியதே (86)

வானசொர்க்கப் பெண்கள் மருத்துவங்க டான்பார்க்கத்
தேனாசியாமறியந் தேறுதலை சொல்லிநிற்க (87)

ஆரணத்தால் வானோர்களல்லா தனைப்புகழக்
காரணத்தான் மாதா கற்ப மிளங்கியதே (88)

சதிமிரா னொளிவீசக் கஸ்தூரி தான்மணக்க
விதமாந் திபுலாவை யெழிலாக முன்னோக்கி (89)

தலையை யுயர்த்தி மெள்ளத் தரையிற் சுஜூது செய்து
நிலையான காலிரண்டு நிச்சயமாய்த் தான் மடக்கி (90)

இடக்கை யபம்பொற்றி யியல்வலக்கை காலில் வைத்துக்
கடக்க வெளியான கலிமா விரலுயர்த்தி (91)

விண்ணு மண்ணும் போற்ற நல்ல வேதத்தோர் தம் வாழ்த்தக்
கண்ணின் மணியான ஹபீபு பிறந்தனரே (92)

சென்னிதனி னெய்தேய்த்துச் சிறந்த கண்ணில் மையுமிட்டுச்
சுன்னத்துடனே தொப்பூழுஞ் சுகமாகக் கொய்திருக்க (93)

சுத்தாங்க பாகத் துடக்கொன்று மில்லாமற்
கஸ்தூரி வீசும் வள்ளல் ஹபீபு பிறந்தனரே (94)

ஆனைக்கக் தீர்ந்த வைம்பதா நாளையிலே
பான்மதி றபியுலவ்வற் பனிரண்டாக் தேதி தனில் (95)

திக்கு விளங்கு நல்ல திங்களிரவுதனில்
ஹக்க னருளாலே ஹபீபு பிறந்தனரே (96)

வையம் புகழ்க் கருபா வரிசை வடகிழக்கிற்
செய்ய தலமான ஜெம்றத்தி லுஸ்தாவில் (97)

அதிக தலமான அபித்தாலிப் தம் மனையிற்
கதிரோ னொளிவீச ஹபீபு பிறந்தனரே (98)

ஒப்புவமை யில்லா தொருவன் றிருத்தூதர்
யிப்புவியோர் வாழ்த்த நல்ல வின்பநபி தாம் பிறந்தார் (99)

ஈசாநபி நானி லங்க நூறுண்டு மட்டுங்
கூசா தெரிந்த கொழுநெருப்பு நூர்ந்ததுவே (100)

தீவான மேலெழுந்து திசையும் வளர்ந்தோங்குஞ்
சாவரக் கடலுந் தரையாக வற்றியதே (101)

அமானமல்லா தன்னருளா லங்கும் பிரியமுடன்
சமான மெனுந் திரியுந் தானூ முறிபொங்கியதே (102)

திதிசமைய விண்ணெழுந்து சேருவான் கோட்டை தனிற்
பதினாலு கொத்தளமும் பாழா யிடிந்ததுவே (103)

பூமிதனிற் காபிர் போற்று புத்துகான்க ளெல்லாம்
நாமிருப்ப தாகாதென்று நாணித் தலை கவிழ்ந்து (104)

தங்க ரத்தரிக்கு மிபுலீசுடைய
சிங்காசனமுஞ் சிதறி யிடிந்ததுவே (105)

வான் புத்துப்பேய்கள் வலுமைப் பெருங்கணக
டான் பயந்தே விழுந்து தரைமி லடித்ததுவே (106)

இந்தப்படி புதுமை யெவ்விடமுந் தானடக்க
வந்து பிறந்த முஹம்மதரைப் பெண் கொடியார் (107)

கையிலெடுக்கக் கருத்தி னினைத்தளவிற்
செய்யும் புகழிறையோன் ஜிபுரீலைத் தான் கூவி (108)

எம்முடைய தூதை யெவரு மெடுக்க முன்ன
மும்முடைய கையாலுவர் தெடுத்து வாருமென்றான் (109)

அந்த மொழி கேட்டவுட னுதிஜிபு ரீல்தாம்
புந்திமகிழ்ந் தெடுத்துப் போயினார் வானகத்தில் (110)

வானகத்திற் சொர்க்க வளம் பெருகு மாறுதனிற்
போன பின்பு நல்ல புதுப்புனலி னீராட்டி (111)

பாருமலே யிருக்க மையுமிரு கண்ணிலிட்டு
வீறான மேனியெங்கு மேன்மே லலங்கரித்து (112)

வாசப் பொடி பூசி வான்மலைக ளொத்திசைய
மோசை பெறச் சுற்றியொரு சொடிக்குள் வைத்தனரே (113)

வைத்த பிள்ளை தன்னை வாழ்த்திச் சபானுகி
முத்தமிட்டு தானேந்தி மூந்தி மடியில் வைத்தார் (114)

ஐந்துஞ் சபாதனக்கண் கேகன் றகுமத்தென்றே
சாந்த குணமான நல்ல சத்தமொன்று கேட்டனரே (115)

சத்தமொன்று கேட்டவுடன் சபாவினுக்குக் கண்ணெதிரே
யெத்தலமு திக்கு மெழுவானந் தோற்றியதே (116)

அன்னபுதுல் முத்தலிபன் கானக்கு பாவினுக்குட்
டுன்பமுற்று நின்றங்கொரு தாயவாங் கேட்டாரப்போ (117)

அங்கிருக்கும் புத்துகான்க ளடியோடு தான் சிதறித்
தங்கடங்க டிக்கிற றலைகவிழ்ந்தன் கோடியதே (118)

கருபத்துல்லாவும் ஹபீபுதிசை நோக்கித்
தல்வித் தல்வித்தான் விழுந்து தரைமிற் சுஜூதுசெய்து

துய்யவனே யென்னை நின்று தப்புரவாய்த் தப்பாமற்
செய்த விறையெனவே சிறப்பாய்ப் புகழ்ந்ததுவே (120)

பாச் சுஜூதிட்டதுங் கற்சிலைக ளோடியதும்
னவிசொண்ணு நதிசயித்து நல்லபுதுல் முத்தலிபு (121)

தானேகி யாமினார் தம்மனையை நாடியங்கே
போனார் நேரம் பொழுது விடிந்ததுவே (122)
ஆமினாரே நீ ரருகாக வாருமென்றார்
பூமிதனின் மின்போற் புறப்பட்டெதிர்ந்து வந்தார் (123)
வந்தவுடனே பார்த்து மகளேயுன் னெற்றிதனி
லந்தமுள்ள முத்தொளிபோ லானவொளி யெங்கேயென்றார்
அன்புடனே மாமனா ரழகாகக் கேட்டவுடன்
பின்பு மகிழ்ந்து நல்ல பிள்ளையொன்று பெற்றேனென்றார்
பெற்றேனென்ற போதுவெகு பெருமையுள்ள பிள்ளைதனைக்
குற்றமறப் பார்க்கவிங்கே கொண்டுவாரு மென்றுரைத்தார்
தேனுமினார்தாம் சிறப்புடனே வாய்திறந்து
வானோர்கள் சொல்லி மறைந்த வுரைப்படியே (127)
மூன்று நாளைக்கு முடுகிப் புவிமனிட
ருன்றிவந்து பார்க்கவிங்க ளுத்தார மில்லையென்றார் (128)
அந்தமொழி கேட்டவுடனன்பான முத்தலிபு
சிந்தை புழுங்கிமிகச் சீறி மனங்கழன்று (129)
செங்கண் பொறிபறக்கத் தேனுமினார் பயந்தங்
குங்கண்மனை யுங்கள் பிள்ளை யுட்புகுந்து பாருமென்றார் 130
மெல்லிநல்லார் சொல்ல விறலபுதுல் முத்தலிபு
வல்லமையினாலே வாயலெட்டிப் பார்த்தனரே (131)
கன்னங் கறுத்துக் கருமேகம் போலொருவர்
மன்னுமொளி வாளெடுத்து வண்டுறுக்கக் கண்டனரே (132)
மெய்யறுக்க வாளால் வெருண்டுறுக்கக் கண்டவுடன்
கைநடுங்க வாயகுழறிக் கால்பதறி யோடினரே (133)
ஓடியமுத்தலிபங் கோரிடத்திலே தரித்து
நாடினா ருட்கூட்டி நாமிவனை யிப்போது (134)
வீட்டைவிட்டுத் தள்ளி வெளிபடுத்த வேண்டுமென்று
நாட்டமுடன் றன்மனதி னன்றாய் நினைத்தனரே (135)
நன்றாய் நினைத்தமொழி நால்வருடன் சொல்லுமுன்னே
அன்றேழு நாளா யதுமயக்க மாயிருந்தார் (136)
இந்தபடி யிருக்க வேழுநா ளாகுமட்டு
முந்தச் சொர்க்கமாநகர் முழுகாட்டிப் போயினரே (137)

நாளேழுஞ் சென்றதற்பி னல்லபுதுல் முத்தலிபு
தாழாதவாமினார் தம்மனைக்கு வந்தனரே (138)

வந்தபுதுல் முத்தலிபு முஹம்மதரைத் தான் வாங்கிக்
கந்தணம வீசுமொளிக் கருபாவைத் தானெடுத்து (139)

ஆருந்திவலஞ் செய்தரிய கருபாவி னுட்போய்
பேரு முஹம்மதென்று பிரியமுட னிட்டுவந்தார் (140)

வந்தாமினார்தம் மலர்க்கரத்திலே கொடுத்துச்
சந்தோஷமாகத் தம்மனையிற் போயிருந்தார் (141)

எழுநாள்மட்டு மிலங்கு முஹம்மதுவுந்
தாழாத வாமினார் தம்முலை யருந்தியபின் (142)

இன்புற அபூலஹபி னெழின்மனை யிருந்தவொரு
அன்புறு துவைபாவு மழகாய் முஹம்மதர்க்கு (143)

மனமகிழ்வி னோடுமுலை மாறாமலே கொடுத்துக்
கனபுகழ் மருவரிசை கலித்தோங்கு நாளையிலே (144)

வானவர் ஹூறுனியரும் வான்மிருகப் பட்சிகளுந்
தானவனே நன்னபியைத் தயவாய் வளர்ப்பமென்றார் (145)

குற்றமில்லா வல்லவன்தான் கோதையலி மாவொழிய
மற்றவர்களியாரும் வளர்ப்பதில்லை யென்றுரைத்தான் (146)

இந்தபடி யிறையோ னெழிலாய் மொழிந்ததற்பின்
பன்னும் குனையெனுமூர் பஞ்சம் பிடித்ததுவே (147)

பஞ்சமது பிடிக்கப் பலதிசையு மொன்றிலையாய்த்
துஞ்சினர் போய் மற்றோர் துலையா விசாரமிட்டார் (148)

திக்குள்ள வூர்தனிலே செல்வோ மெனநாடி
மக்கத்தி லாடவரு மாதர்களும் வந்தனரே (149)

கூலிமுலை யூட்டவென்று கோதையர்க ளெல்லோரும்
பாலருண் டோவென்று பகர்ந்தார் தெருத்தோறும் (150)

கவலையுடன் வீதி தோறுங் காரிகையார் தாந்திரியே
வவரவர்க்குப் பிள்ளை கிடைத்தங்கனே தானிருந்தார் (151)

வரிசையுள்ள வாரீது மங்கை யலிமாவு
மொரு வீடு போதாம லூரெல்லாந் தான்றிரிந்தார் (152)

அந்தப்படியே விவர்க ளலைந்துதிரிந்துமேயோர்
மைந்தன் கிடையாமல் வாடிக் கரைந்தனரே (153)

கரைந்து மிகவாடிக் கலங்குமந்த வேளையிலே
விரைந்தபுதுல் முத்தலிபு வீட்டினிடம் போயினரே (154)

கீர்லுகொந்து வந்தவிந்தக் காரிகையாள் கூவிமுலைப்
    பாலுமுத மூட்டவொரு பாலனுண்டோ வென்றுரைத்தாள்
பிள்ளையுண்டோ வென்று பிரியமுடன் கேட்டளவில்
    வள்ளலெனு முத்தலிபு வந்திவரைப் பார்த்தனரே (156)
பார்த்தவுடன் முத்தலிபு பண்புகுலம் பேர்கேட்டு
    ஏற்ற முள்ள வாமினா ரெழின்மனைக் கனுப்பினரே (157)
ஆலம்விழி வலிமாவாமினார் வீட்டினிற்போய்ச்
    சாலிசெனுமாமினார் நம்மையே நோக்கினளே (158)
நோக்கியலிமாவு நின்னிடையார் முனமொழிவாள்
    வாக்குடைய வம்மாகேள் வளநாடு பஞ்சமதாய் (159)
நாங்களொரு கூட்டமதாய் நாற்பதுபேர் வஞ்சியுடன்
    றூங்குகின்ற வொட்டைதனிற் றரித்துவந்தோம் தாயாரே ()
வந்தவர்க ளொட்டையெல்லா வாலிப மானதினா
    லெந்தனொட்டைப்பிந்தினதா லெங்களுக்குப் பிள்ளையில்லை ()
பாலமுத மூட்டவொரு பாலகரு மில்லாமல்
    கோலமுடனுங்களிடத் தேடிவந்தோ மென்றுரைத்தாள் ()
பிள்ளைக்குப் பாற்கொடுத்துப் பிரியமுடனே வளர்ப்போ
    முள்ளபடி யெங்களுக்குங் கொஜிபணங்கதான் கொடுத்தால்()
இன்னபடி சொன்ன வெழிலலிமாவைப் பார்த்து
    அன்ன நடையுடைய வாமினார் தாமொழிவார் (164)
எந்தன் மகன் றனக்கிக் கிணையதந்தை தானுமில்லை
    யுந்தம் பசிதீர்க்க வொஜீபணங்க டானுமில்லை (165)
அரிய முலைக் கூலி யளிக்க வகையுமில்லை
    வரிசையுடன் வளர்க்க வந்திரே பாருமென்றார் (166)
பாருமென்ற சொற்கேட்டுப் பாலனுக்குப் பால்கொடுக்க
    காரியரு மாரீது நல்லதென்று சம்மதித்தார் (167)
சம்மதித்துக் கையாற் றாவி யெடுத்தணைத்துச்
    செம்மலே வள்ளலென்று சிருய்ப் புகழ்ந்தனரே (168)
அலிமாவைநோக்கி யஹ்மதரும் பார்த்தளவிற்
    கலிகடுக நீங்கிக் கனசெல்வம் பொங்கியதே (169)
பாதாதிகேசமுத பளபளவென்று மின்னியெங்கும்
    வேதாதி சூகை முலை மேன்மேல் வளர்ந்ததோங்கி (170)
கருத்தின் மகிழ்ந்து ஹலீ பிறகூல் பசிதீர
    வருத்தாக சூகைமுலை வாகாக வுண்டனரே (171)

கல்லழுந்த முட்டியங்க ளற்பதுநா ளானபின்பு
வல்லநகர்க்கேக மனதில் னினைத்தனரே (172)

எண்ணி மனதி லெழிலாமி னார்தமக்கு
வண்ணமுறு முத்தலிபு மன்னனுக்குஞ் சொல்லியபின் (173)

பயணமென வெழுந்த பாலனையுந் தானெடுத்து
நயமுடைய கருபாவை நாடி நடந்தனரே (174)

கசுவி லசுவதெனுங் கல்லெதிரே வந்தனரே
வசமாக வெல்லோரும் வந்து தொட்டும் முத்தமிட்டார் (175)

கல்லெதிரே வந்து நின்ற காரணத்தைக் கண்டலிமா
முல்லைநகை வாய்திறந்து முத்தமிட்டுக் கொண்டனரே (176)

நடந்து கருபாவினிற்போய் நன்றாகச் சுற்றியபின்
படர்ந்த புகழலிமா பாங்காகப் போயினரே (177)

பாங்காகக் கூலிமுலைப் பாவையர்க ளெல்லோரும்
நீங்கா தலிமாவு நீண்டவழி சென்றனரே (178)

மக்கநக ரெல்லைவிட்டு மாகலிமா வாரீது
மொக்கலெனும் பேர்சூழ வொட்டையின்பேற் கொண்டனரே.

வந்தும் மெருஞ்சொறியும் வனமூப்புங் கொண்டிருந்த
பங்கமுறு மொட்டையின்மேற் பாலரொடுந் தானேக (180)

பண்டையுடல் தனிலும் பளபளென்று தான் கொழுத்துக்
கொண்டு பருத்துக் குதித்து நடந்ததுவே (181)

மேகங் கவிகையிட வண்ணவர்கள் சூழ்ந்துவர
வாகுபெறக் கன்மரமும் வாழ்த்திச் சலாமுரைக்க (192)

இந்தப் புதுமைகளை யெல்லவருந் தானறிந்து
வந்ததலிமாமகன் பறக்கத்தென்று தான்மொழிந்தார் (183)

அலிமாமனை லஹ்மதரும் வந்ததினுற்
கலிகடுன் பநீங்கிக் கனசெல்வம் பொங்கியதே (184)

அந்தநாட் டெண்ணி லவர்மனையி லாடுபல
சோர்ந்து வறடுசொறி நோயோ டிருந்ததெல்லாம் (185)

வருந்த முள்ள வாடதின்மேல் முஹம்மதரின் கைதடவப்
பருத்துறக் கொழுத்துவும்மிப் பான்முலைசொரிந்ததுவே (186)

பொங்கி யருள் செல்வம் பொலியு முஹம்மதலி
மங்கை யலிமாதம் வலது முலை யுண்டிருந்தார் (187)

உடைய வலதுமுலை யுண்டிருந்த தல்லாம
லிடதுமுலை குடிக்க வில்லையென்று தானினைந்து (188)

எத்தாக சித்திரையி லிடதுமுலை தானூட்ட
லவத்தங் கருத்தாமன் மாறிமுகங் கொண்டனரே (189)

அந்தப் புதுமைதனை யலிமாவுந் தானறிந்து
புந்தி மகிழ்ந்து புகழ்ந்திருந்த நாளையிலே (190)
இந்தஞருமாறித் தினமுமலிமாமனைவி
லந்து நபிக்குத் தொட்டி லாட்டாத நாளில்லையே (191)
அரிய முஹம்மதுக் தான்வொளி வல்லாம
லிரவிற் பனிவிளக்கங் கேற்றினதுந் தானில்லையே (192)
வடிவுடைய கஸ்தூரி மாறாது மேனிதனிற்
றிடமுடைய வீயெறும்புந் தீண்டினதுந் தானில்லையே (193)
சடலந்திற் புழுதி தங்காது மேற்போற்றும்
பிடவைதனி லழுக்கு பிடித்ததுவுந் தானில்லையே (194)
வண்ணலர் மூக்கினினீர் வாராது நாடோறுங்
கண்ணதனிற்பீளை கண்டதுவுந் தானில்லையே (195)
மலஞ்சலங்க ளெப்போது மானிடர் கண்டதில்லை
தலம்பதியுங் காலடியுஞ் சாபைகிழ றானில்லையே (196)
மன்றாட்டக் தாங்கு முஹம்மதனார் தாயவளா
நன்றாக வேதான நடக்கநடை கற்றனரே (197)
அரியபுக ழலிமா வழுதூட்டு நாளையிலே
வரிசை நபிக்கு வயதிரண் டானதுவே (198)
குடித்தமுலை மறக்கக் குயிலலிமா நன்நபியை
யெடுத்து மக்கமாநகரி லின்பமுடன் வந்தனளே (199)
வந்தாமினாரை மலர்க்கையினாற் றான்றழுவி
யிந்தாரு முஹம்ம தென்றங் கேந்திக் கொடுத்தனரே (200)
துன்றுசில நாளிருந்து தோன்றலையுந் தானெடுத்துச்
சென்றுகுனையின் பதியிற்சேர்ந்தங் கிருந்தனரே (201)
அங்கிருந்து நாளி லழகாய் முஹம்மதற்கு
மங்கரமலேதான் வயதுநா லானது (202)
தேடும் புகழலிமா செல்வரோடு நந்நபியும்
ஆடுபலமேய்ப்பவருங் கானிற் போயினரே (203)
பொருட்பெருத்த கானகத்திற் பேய்த்[illegible] குமாரருடன்
விருப்பமுட னாடதனை மேய்க்குகின்ற வேளையிலே (204)
அங்கேயுவா மரத்தி லான நிழலருகே
தங்க முஹம்மதரைத் துரையாகத் தானிருத்தி (205)
இல்லமை யலிமாவு மியல்பாகப் பெற்றெடுத்த
வளமை அப்துல்லாவை மந்திரியாய்த் தானிருத்தி (206)
சேவர்க ளென்னச் சிலபேரைத் தானிருத்தி
யேவல்முறைத்தொழில்க ளியல்பாகச் செய்துநிற்க (207)

அந்த நேரத்தி லான ஜிபுரீலும்
வித்தையுடன் வாளேந்தி விண்ணிறங்கி வந்தனரே (208)
அடுத்த மீக்காயுலுமன் பாய் அங்கிறங்கிப்
படிக்கமுடன் கெண்டிகொண்டு பாங்குடனே வந்துநின்றார்()
மானிடர்போல் வந்துநின்ற வானவரைக் கண்டவுடன்
ஆன விளையோர்களெல்லா பஞ்சிப் பயந்தனரே (210)
பயந்திருக்கும் வேளையிலே பயகாம்பர் தம்முடைய
ஜெபந்தரித்த கையைவந்து காடிப் பிடித்தனரே (211)
பிடித்தரித்க கையைபிந்தாமல் பிடித்திழுக்க
யடுத்திருந்த பிள்ளைகள்போ யப்புறத்தே நின்றனரே (212)
நின்றுசிறு பிள்ளைகளு நெடுமுச் செறிந்தனரே
கண்டுமனம் வரய்குழறிக் கால்பதறி யோடினரே (213)
மானிடரோ வானவரோ மற்றுநக ருள்ளவரோ
கானவரோ வீனவரோ காட்டிலுள்ள கள்ளர்களோ (214)
கல்லவரோ தீயவரோ காட்டமுட னந்நபியைக்
கொல்லவிங்க வந்தவரோ கொண்டேக வந்தவரோ (215)
ஊரறியோம் பேரறியோ மொன்றுமறியோ மிவர்தம்
பேரறியோ மென்றுபல பேச்சுஞ் சொல்லுவர்கள் (216)
இருந்தவர்கடாஞேந்தி யெங்கண் முஹம்மதரை
வருந்திக் கரம்பிடித்து வைத்திருக்க காரியமேன் (217)
விட்டுவிட்டால் மேல்மேலும் வீறும் பெரும்பொருளுந்
திட்டமுடனே பெறுவீர் நீதேதுஞ் செய்தக்கால் (218)
அலிமா பெரும்பழியுமாமினார் தம்பழியும்
பொலிவாக வந்து புகுதுமென்று தானுரைத்தார் (219)
இந்தப்படி சொல்லி யிளைஞோர் பலகூற
மன்னனபு துல்லாவும் வாய்திறந்து நேதுசொல்வான் (220)
முஹம்மதரை விடுத்தும் முன்னாலே யென்னைவைத்துச்
செகமகிழ நீங்கள் கொலை செய்யுங்க ளென்றுரைத்தான் (221)
அந்தமொழி சொல்ல வவர்களது கேளாமல்
வித்தைநபி யைத்தரையில் வீழ்த்திக் கிடத்தினரே (222)
மிஞ்சு மொளிவான நல்ல வேத முஹம்மதரை
நெஞ்சுதனிற் கீற கொடுதுபயந் தோடினரே (223)
கீறியே தாமரைக்காய் கிழித்தங் கிபுலீசுடைய
கூறுபல வுள்ளிருந்த குறிகளையுங் கண்ணேந்தே (224)
கழுப்புங் கசடுங் கடுகவெடுத் தேயெறிந்து
மறைப்பொருளு மீமானும் வான்பொருளுந் தானிரப்பி (225)

தங்கு மறிவுக் தயவுமிக வேசிறப்பி
வெங்குகபி மேற்றழும்பு மில்லாமற் செய்தபின்னர் (226)
பிடரிதனி லாஞ்சனையும் பேர்பெறவே யெய்துநெடுங்
கடல்சூ ழுலகிற் ஹபீபெனவேவார் பேருமிட்டார் (227)
சொன்னார் துணியாகத் துடங்குமனாட் டொடுத்து
முன்னோன் விதியான் முடிகிம் புவிதனிலே (228)
டண்டான பேரை யெல்லா மொக்க நிறுத்தாலுந்
தண்டி யிவரோடு சரிவரா தென்றுரைத்தார் (229)
என்றுரைத்துப் பின்னுமவர் வழியினின்றோர்க
நன்றியுள சுவர்க்க நகர்பெறுவ ரென்றுரைத்தார் (230)
நகர்பெறுவ ரென்றுசொல்லி நல்ல விமையோரும்
பகரமுடன் வண்ணதிலே பாங்காகப் போயினரே (231)
அஞ்சிப் பயந்தோடு மாண்பிள்ளைக ளத்தனையு
மிஞ்சும் குணையின்பதி மேவியலி மரவுடனே (232)
எங்கண் முஹம்மதரை யின்றிருவர் கானகத்திற்
பங்கமுறக் கொண்டேகிப் பழிசெய்தா ரென்றுரைத்தார் ( )
அந்தமொழி கேட்டங் கலிமாவு மாரிதுவுஞ்
சிந்தைநொந்து தேம்பித் திகைத்துப் பதறிமிக (234)
பதறியெழுந்துபெற்ற பாலனையுந் தான் கூட்டிச்
சிதறிப் பலவழியுந் திக்கனைத்துந் தேடிச்சொல்வாள் (235)
சூதை முலைச்சுரக்கச் சுகமுண்ட காரணரே
சாய்கை நிழற்றரையிற் தங்கா முஹம்மதரே (236)
கல்லு நடந்துதரக் காட்சிசெய்த காரணரே
புல்லுமரமும் புகழ்ந்தேற்று புண்ணியரே (237)
எப்போது நான்காண்பே னென்றனிரு கண்குளிரத்
தப்பா தலிமாவுந் தான்புலம்பித் தேடினளே (238)
ஆட்டின் முதுகையருட் கையாற் றான்றடவ
னாட்டமுடன் பால்சுரக்க நல்லவரம் பெற்றவரே (239)
அன்றுமக்க நாட்டி லறமெலிந்த வொட்டை தனிற்
சென்றிருக்கவே பருத்துத் தேறச்செய்த காரணரே (240)
குட்டம் பெருநோய் குறைநோவு கண்குருடுங்
திட்ட முமதுகையாற் தீண்டிலது தீர்ந்திடுமே (241)

எமது மகனேயா னேங்கியழுதசத்த
முமது திருச்செவியி லூடுறவே கேட்கிலையே (242)
ஆதார வானோர்கள் சூழ்ந்திருக்கப் பெற்றெடுத்த
மாதா தனக்கு மறுமொழிகா னேதுசொல்வேன் (243)
எங்கள் வறுமையிரு ளெட்டுத்திசையும் பறக்க
வங்கேலிற் செய்த வழகான காரணரே (244)
என்று அலிமா புலம்பி யிருகண்ணீர் தான்சொரிய
வன்று உலாமரத்தி லஹ்மதரைக் கண்டவுடன் (245)
பிறவிக் குருடர் பெரியோ ருதவியினால்
நிறையவிழி முகத்தி னின்றிலங்கப் பெற்றதுபோல் (246)
நன்றி வருமலிமா நன்னபியைத் தானெடுத்துக்
கன்றுயுட னாறுசெய்த காயமெங்கே யென்றுரைத்தார் (247)
அப்போது நன்னபியு மழகுகனி வாய்திறந்து
செப்புமலி மாவுடனே செய்தியெல்லாஞ்சொல்லலுற்றார் (248)
இங்ங னிருகையிலே யிருவர் வந்தென் னெஞ்சதனி
லங்கவர்கள் கீறினது மயக்கமாய் கிடந்தேன் (249)
நினைவாகப் பின்னெழுந்தே னெஞ்சின் நடுவறியேன்
முனையாகக் கீறியவர் முத்திரையென்றே பதித்தார் (250)
நல்லதொரு பேருமிட்டு நல்மொழியாற் றான்வாழ்த்தி
வல்லவன்ற னேவலினால் வாழ்த்தியே போயினரே (251)
போதமுடன் வானகத்தே போனவரைப் பார்த்திருந்தேன்
கீதமுடன் கண்டதின்ன செய்தியென்று தானுரைத்தார் (252)
கண்ணின் மணியே கருத்தி லடங்காப் பொருளே
விண்ணவர் துதிக்க விளங்கவந்த காரணரே (253)
நன்னிறமே பொன்னொளிவே நானுமைத்தான் கண்டேனே
யென்மகனே பொன்மகனே யெங்கள் குலக்கொழுந்தே (254)
என்று முஹம்மதரை யெடுத்தணைத்து முத்தமிட்டு
நன்றியழியாத நல்சொர்க்கப் போதகரே (255)
வறுமைதனி லழுந்தி வ.டுமந்த வேளையிலே
திறமையுடன்புதையற்சென்றெடுத்தார்தங்களைப்போல் (256)
ஆதியருளா லஹ்மதிறசூல் நபியைத்
தாதையுடனு மன்னை தான்கூட்டி வந்தனரே (257)

வந்துசில நாளிருந்து மங்கை யவிமாவுஞ்
சிந்தைதனின் மக்கநகர் செல்வோ மெனநாடி (258)
அஞ்சு வருஷ முமே லானதொரு பரத்தையினற்
கொஞ்சி முஹம்மதரைக் கூட்டிவழி சென்றனரே (259)
வழியில் வரும்போது வல்லோ னருளாலே
அழியா முஹம்மதரை யமரர்கொண்டு போயினரே (260)
போயோரிடத்திற் புனல்வாழை யின்னடியிற்
காயாத நீதி ஹபீபை வைத்துப் போயினரே (261)
இருந்தபிள்ளை காணுதா லேங்கி மனத்தளர்ந்து
விரிந்த குழல்சரிய மேன்மேல் விழுந்தழுதாள் (262)
அழுது முகம்வாடி யங்கங்கே தன்றேடிப்
புழுதி புரளப் புறப்பட் டெழுந்தனளே (263)
நடந்துமிகச் சஞ்சலமாய் நல்லமக்க மாநகரின்
மடந்தையெனு மாமினுர் வாழ்மனைபோய்ச் சொல்லினளே( )
சொல்லியபி னெல்லோருந் துன்பக் கடலழுந்தி
நல்லறிவு போக்கி நடுங்குமந்த வேளையிலே (265)
சிறந்தநகு பாத்திசையிற் தென்மேற்கு மூலைதனி
னிறைந்த புனலோடை நீன்றகரை மீதினிலே (266)
வாழை மரத்தடியில வந்திருக்கிறு ரெனவே
சூழ வொருசத்தந் தொனிபாகக் கேட்டதுவே (267)
கேட்டவுடன் முத்தலிபு கெம்பீரமாய் யெழுந்து
வோட்டமாய்த் தானோடி யுவந்தெடுத்தார் நந்நபியை (268)
உகந்தெடுத்துக் கொண்டேகி யுந்தன்மக னிந்தாவெனச்
செகம் புகழு மாமினுர் செலவமனை யுட்புகுந்தார் (269)
அங்கே புகழலிமா வண்ணன் முஹம்மதரைத்
தங்கையாலே பிடித்துத் தாயார் கையிற்கொடுத்தாள் (270)
செய்ய முஹம்மதரைத் தேனுமினுர் வாங்கிட
மையெல்லாங் கண்ணுல வீங்க முத்தமிட்டனரே (271)
அந்த மடனலிமா வானோர்களைப் போற்றிச்
சிந்தைதனி னபியைச் சிறப்பாய்ப் புகழ்ந்தனரே (272)
...த கீர்த்தி யுண்மை முஹம்மதருந்
தாயா ரிடத்திற் றரித்து வளர்ந்தனரே (273)

மக்கநகரில் வரிசைபெற நபியும் வந்தனரே
திக்கெல்லாம் விளங்கச் சிறப்பா யிருந்தனரே (27
நல்ல நபிப்பட்ட நலமாய் வருமளவும்
வல்லநபி யிறசூல் வாழ்ந்திருந்தார் மக்காவில் (27
மேருக்கொப் பாகவேதான் வீற்றிருந்தார் நக்க பிதா
மாருக்கும் பொறுமையுட னன்பா யிருந்தனரே (276)
ஆதமுட னக்நபிபு மானவில்லாம் வளர
வேதனருண் மக்காவி லிருந்தார் முஹம்மதனுர் (277)
அத்த முடனலிமா வாமினுரைப் போற்றிச்
சிந்தையுடன் சூனையிற் செல்வோ மெனவுரைத்தாள் (278)
செல்வோ மெனவுறைக்கச் செல்வபுதல் முத்தநபி
கல்பில் மகிழ்நதுகன பொருளுந் தானுதவி (279)
செல்வ நகர்க்கேகச் சிறப்பா யனுப்பினரே
நல்ல மகிழ்ச்சியுட னடந்தா ரவர்களுமே (280)
மக்கநகர் காடுவரு மலையெல்லாந் தான்கடந்து
மிக்கசூனை யின்பதியின் மேவிவந்து சேர்ந்தனரே (28
சேர்ந்துமிகக் களிப்பாய்ச் சிறப்பாகச் செல்வரோடும்
வாழ்ந்திருந்தா ரெல்லோரும் வல்லோ னருளாலே (28
பாடினேர் கேட்டோர் பயன்பட லெழுதிவைத்தோர்
நாடி பிறையருளு நபிவரிசையும் பெறுவார் (283)
ஆதியருள் வாழி யஹமதுர்ற சூல்வாழி
வேதநபி மார்வாழி மிக்க பெரியோர்வாழி (28
ஆதமுத னபிமா ரானபேருந் தாம்வாழி
நீத நபிதீனு நீடூழி தான்வாழி (28
அண்ண லபூபக்க ரரிய வுமறுதுமா
னண்ணு மலியஸனு கல்லுஸைனுந் தாம்வாழி (2
தீனை பேர்வாழி தின்பரிமாம்கள் வாழி
மானுன பரத்திமத்து மைந்தா முஹியித்தின் வாழி (
இஸ்லா மினிற்பெரியோர் ரேகசிறியோர் ஞானி
அகிலாகவே ஔலியா ரையமாறத்தான் வாழி (288)
படித்தோர்கள் கேட்டோர்கள் பாசராய் வஃலு சொன்னேர்
கடுத்தபாவ நீங்கியெல்லா வருள் பெறுவார். (

நபியவதாரவம்மானை முற்றிற்று.

PRINTED AT SHAHUL HAMEEDIA PRESS, MADRAS. 8—